தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 130/ந/2023
நாள் 13.07.2023

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 10.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.05.2023 அன்று பெறப்பட்டு 130/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், திருமங்கலம் நகர், உசிலம்பட்டி ரோடு (சந்தைபேட்டை) அருகில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை எதிர்புறம் உள்ள, ராஜா ராணி ஏ.சி மஹால் (திருமண மண்டபம்) அனுமதிக்கு மாறாக கூடுதலாக இரண்டு மாடிகள் விதிமுறைகள் மீறி கட்டப்பட்டுள்ளது. ராஜா ராணி ஏ.சி மஹால் முன்பாக "ஓடை"யை ஆக்கிரமிப்பு செய்தும் கட்டடம் கட்டப்பட்டுள்ளது, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை G.O.Ms.No.175 நாள் 14.07.2006–ன்படி ஓடை, ஆறு, குளம், ஏரி, சுடுகாடு, இடுகாடு, மின்வழி பாதையில் இருந்து 100 மீட்டர் இடைவெளி விட்டுதான் கட்டுமானங்கள் கட்டப்படவேண்டும். ஆனால் மேற்படி மஹால் "ஓடை" ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் மஹாலுக்கு நான்குபுறமும் 5 அடி இடைவெளிவிடாமல் அருகில் உள்ள கட்டடங்களுடன்

இணைக்கப்பட்டுள்ளது. ராஜா ராணி ஏ.சி மஹால் (திருமண மண்டபம்) வளாகத்திற்குள் இரண்டு மாடிகளை கொண்ட குடியிருப்பு மனை அனுமதிக்கு மாறாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் ராஜா ராணி ஏ.சி மஹால் மற்றும் குடியிருப்பு மனைகளுக்கு முறையாக அளவீடு செய்யாமல் குறைந்த அளவு மதிப்பீடு செய்தும் சொத்துவரி வசூலிப்பதனால் திருமங்கலம் நகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பீடு ஏற்படுகிறது. மேற்படி மஹாலுக்கு முறையாக சொத்துவரி வசூலிக்கத் தவறிய சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

மேலும் ராஜா ராணி ஏ.சி மஹால் (திருமண மண்டபம்) வாகனங்கள் நிறுத்துவதற்கு சிறிதளவுகூட இடம் விடாததால் விசேஷ காலங்களில் வரும் நபர்களுடைய வாகனத்தை மெயின் ரோட்டில் நிறுத்துவதினால் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகி வருகிறார்கள்.

மேலும் ராஜா ராணி ஏ.சி மஹால் பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33–ன்படி அக்கட்டடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தில் (Directorate of Town and Country Planning) முறையாக ஒப்புதல் பெறவில்லை.

ராஜா ராணி ஏ.சி மஹால் (திருமண மண்டபம்) பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம் 1965–பிரிவு 2 (8)–ன்படி வருவாய்த்துறையிடம் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக மஹால் இயங்கி வருகிறது.

எனவே மேற்படி ராஜா ராணி ஏ.சி மஹால் (திருமண மண்டபம்) அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டடம் கட்டப்பட்டும், அரசுக்கு சொந்தமான ஓடையை ஆக்கிரமிப்பு செய்தும், மஹால் வளாகத்திற்குள் அனுமதிக்கு மாறாக இரண்டு மாடி குடியிருப்புகள் கட்டப்பட்டும், வாகனம் நிறுத்துவதற்கு முறையாக வாகனநிறுத்தும் இடம் (Parking space) விடாமலும், மஹாலுக்கு நான்குபுறமும் 5 அடி விடாமலும் அவசர கால வழி வெளியேறுவதற்கு விடாமலும், உரிய அரசு துறைகளிடம் உரிய அனுமதி பெறாமலும், சட்டத்திற்கு புறம்பாக உள்ளதும் விதி மீறி கட்டப்பட்டுள்ளதுமான ராஜா ராணி ஏ.சி மஹால் (திருமண மண்டபம்) கட்டடம் மற்றும் வளாகத்திற்குள் உள்ள குடியிருப்பு மனைகளை அகற்றியும் (remove) மற்றும் உடனடியாக மின்இணைப்புகளை துண்டித்தும் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவுகள் – 56(1) மற்றும் 57 டன் படிக்கப்பட்ட பிரிவு 85–கீழ் Stop work notice / Notice calling for approved plan – அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடிமுத்திரையிடும் Lock and Seal Demolition Notice வழங்கி அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் நடுவத்தை மிகத்தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருமங்கலம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் தனது 26.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி என்பவரின் மனுவில் தெரிவிக்கப்பட்ட உசிலம்பட்டி ரோட்டில் கதவு எண்.565/1ஏ–ல் இயங்கி வரும் ராஜாராணி ஏசி மஹால், குடியிருப்பு கட்டடம் ஆகிய கட்டடத்திற்கு அனுமதி பெறப்பட்டு இருப்பின் அதன் நகல் வழங்க 10.05.2023 ஆம் தேதியில் கட்டடத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டடம் அமைந்துள்ள இடம் ஓடை ஆக்கிரமிப்பில் உள்ளதா என்பதற்கான அறிக்கை தருமாறு நகரளவர், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 10.05.2023 ஆம் தேதியில் குறிப்பாணை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்காணும் இடத்தில் உள்ள கட்டடத்திற்கு சொத்துவரி குறைவாக வரிவிதிக்கப்பட்டுள்ளதா என்பதற்கான அறிக்கை சமர்ப்பிக்க திருமங்கலம் நகராட்சி அலுவலக வருவாய் உதவியாளருக்கு குறிப்பாணை கடிதம் 10.05.2023 ஆம் தேதியில் வைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் உரிமையாளருக்கு நகராட்சி அனுப்பிய கடிதத்திற்கு பதில் கடிதம் வரப்பெற்றதன்படி, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள இடத்தில் மேற்படி கட்டடத்திற்காக கட்டடத்தின் உரிமையாளருக்கு திருமங்கலம் நகராட்சி மூலமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 205 (1) (2)ன்கீழ் 30.05.2023 ஆம் தேதிய அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் குடியிருப்பு கட்டடத்திற்கு அனுமதி பெறப்பட்டிருப்பின் அதன் நகலை இணைக்கக் கோரி இடத்தின் உரிமையாளருக்கு மீண்டும் அறிவிப்பு திருமங்கலம் நகராட்சி மூலமாக 31.05.2023 ஆம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் உள்ள ராஜாராணி மஹால் கட்டடத்திற்கு சொத்துவரி எதுவும் குறைவாக விதிக்கப்படவில்லை என திருமங்கலம் நகராட்சி அலுவலகத்தின் வருவாய் உதவியாளர் 12.05.2023 ஆம் தேதியில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஓடை ஆக்கிரமிப்பு தொடர்பாக நகரளவர் மூலமாக அளவீடு செய்து வழங்கத் தெரிவித்து திருமங்கலம் நகராட்சி குறிப்பாணை கடித ந.க.எண்.995/2023/எப்1 நாள் 10.05.2023 மற்றும் 16.06.2023 தேதிகளில் கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன். மேலும் குடியிருப்பு கட்டடத்திற்கும், திருமண மண்டபத்திற்கும் முறையே வீட்டு உபயோகம் மற்றும் வணிக உபயோகத்திற்கும் தனித்தனியே கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருமங்கலம் நகராட்சி ஆணையரும் 28.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி என்பவர் 28.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சி, உசிலம்பட்டி ரோடு (சந்தைபேட்டை அருகில்) கதவு எண்.565/1Aல் இயங்கி வரும் ராஜா ராணி AC மஹால் அனுமதிக்கு மாறாக கூடுதலாக இரண்டு மாடிகள் விதிகளை மீறி கட்டப்பட்டது. இந்த திருமண மஹாலுக்கு வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங் இல்லை. விசேஷ காலங்களில் மண்டபத்திற்கு வரும் வாகனங்கள் ரோட்டில் நிறுத்துவதினால் கடுமையான வாகன நெரிசல் ஏற்படுகிறது. மேலும் ராஜா ராணி AC மஹால் உள்ளேயே இரண்டு மாடி குடியிருப்புகள் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மஹால் முன்பு உள்ள ஓடையை ஆக்கிரமிப்பு செய்தும் கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக திருமங்கலம் நகராட்சியில் புகார் மனுக்கள் அளிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, சட்டத்திற்கு விரோதமாகவும், அனுமதிக்கு மாறாகவும் கூடுதல் கட்டடம் கட்டியும் அரசு ஓடையை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டும், வாகன நிறுத்தும் இடம் இல்லாமலும் மஹாலுக்கு உள்ளே குடியிருப்பு மனைகள் அனுமதி பெறாமலும், உரிய அரசு துறைகளிடம் முறையாக அனுமதி பெறாமலும் சட்டவிதிகளுக்கு மாறாக செயல்பட்டு வரும் ராஜா ராணி AC மஹால் கட்டிடத்தையும், குடியிருப்புகளையும் அகற்றியும், நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் திருமங்கலம் நகராட்சியால் Stop work Noice / Notice calling for approved plan அறிவிப்பினையும் மேலும் Lock and Seal, and Demolition Notice வழங்கிடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் 28.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை அவருக்கு பதிலாக திருமங்கலம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராகப் பணிபுரியும் திரு. G. வேல்முருகன் என்பவர் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''மதுரை மாவட்டம் திருமங்கலம் நகராட்சி உசிலம்பட்டி ரோடு கதவு எண் 565/1ஏ-ல் இயங்கி வரும் ராஜா ராணி ஏ.சி மஹாலுக்கு வரைபட அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. வரைபடத்திற்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் (deviation) அதற்கான தாக்கீதுகள் 30.5.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் அங்குள்ள குடியிருப்பு கட்டடத்திற்கான அனுமதி பெறப்பட்டிருப்பின் அதன் நகல் உரிமையாளரிடம் 31.5.2023 அன்று கோரப்பட்டுள்ளது. வரைபட அனுமதியை மீறியும் விதிகளை மீறியும் மேற்கண்ட மஹால் கட்டப்பட்டிருப்பின், அக்கட்டடத்திற்கு Tamil Nadu Town and Country Planning Act 1971-ன்படி Stop work Noice / Notice calling for approved plan அறிவிப்பினையும் மேலும் Lock and Seal, De-occupation and Demolition Notice நகராட்சியால் வழங்கிடவும் தேவையான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட கட்டடத்திற்கு சொத்து வரி மற்றும் தொழில் வரியை மேற்கண்ட மஹாலிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மஹாலை ஆய்வு செய்து கட்டடத்திற்குண்டான சொத்து வரி வசூலிக்கப்படுகிறதா என்பது குறித்து மீண்டும் ஆய்வு செய்து கட்டடத்திற்கான சரியான சொத்து வரி மற்றும் தொழில் வரி வசூல் செய்யப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மதுரை திருமங்கலம் நகராட்சி ஆணையரின் 26.6.2023 நாளிட்ட விரிவான அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட உசிலம்பட்டி ரோட்டில் அமைந்துள்ள ராஜா ராணி ஏசி மஹால் (திருமண மண்டபம்) என்கிற கட்டடத்தில் அனுமதியின்றி கூடுதலாக 2 மாடிக் கட்டடங்களும், திருமண மண்டப வளாகத்தில் நகராட்சி அனுமதியின்றி 2 மாடிகள் கொண்ட குடியிருப்பு கட்டடமும் மற்றும் ஓடையை ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்களும் நகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்டு, மேற்படி கட்டடங்களுக்கு குறைவான சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளதாகவும், திருமண மண்டபத்தில் வாகன நிறுத்துமிடமின்றி இருப்பதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள ராஜா ராணி திருமண மண்டப கட்டடம் தொடர்பாக கட்டட உரிமையாளர் சமர்ப்பித்த வரைப்படத்தினை நகராட்சியினர் ஆய்வு செய்ததில், நகராட்சியின் அனுமதிக்கு மாறாக 2 மாடி கட்டடங்கள் கூடுதலாக அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதால் கட்டடத்தை மாற்றி அமைக்கும்படி திருமங்கலம் நகராட்சி ஆணையரால் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்பிரிவு 216–ன்படி 30.05.2023 நாளிட்ட இடைநிலை ஆணையும், அறிவிப்பும் கட்டட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதை ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் திருமண மண்டப வளாகத்தில் 2 மாடிகள் கொண்ட குடியிருப்பு கட்டடத்திற்கு அனுமதி பெற்றிருப்பின் அதன் ஆவணங்களை சமர்ப்பித்திட கோரி 31.05.2023 அன்று நகராட்சியால் கட்டட உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதையும் ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது.

ஓடையை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது தொடர்பான புகார் குறித்து திருமங்கலம் நகராட்சி நகரளவரிடம் அளவீடு செய்து அறிக்கை கோரப்பட்டுள்ளதை நகராட்சியின் 10.05.2023 நாளிடப்பட்ட குறிப்பாணை மற்றும் 16.06.2023–ம் தேதிய நினைவூட்டு குறிப்பாணை மூலம் அறிய முடிகிறது.

ராஜா ராணி திருமண மண்டப கட்டடத்திற்கு முறையாக வரிவிதிப்பு செய்யப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருவதாக திருமங்கலம் நகராட்சி வருவாய் உதவியாளர் தனது 12.05.2023 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவித்த கட்டடங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒரு மாத காலத்திற்குள் முடித்து அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் அனுப்புமாறு திருமங்கலம் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ராஜா ராணி ஏசி மஹால் (திருமண மண்டபம்) என்கிற கட்டடத்தில் நகராட்சியின் அனுமதியின்றி, ஒப்பளிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறாக கூடுதல் 2 மாடி கட்டடங்கள் கட்டி முடிக்கும் வரையிலும் நகராட்சியின் மூலம் அவ்வப்போது முறையற்ற கட்டடங்கள் குறித்து எவ்வித தொடர் ஆய்வும் செய்யப்படாத நிலையில், மனுதாரர் புகார் தெரிவித்த பின்பே

இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு, காலதாமத நடவடிக்கைக்கு காரணமான சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R.மயில்சாமி,
பிளாட் எண். 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளங்குடி,
மதுரை – 625 018.

2) ஆணையாளர், திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்